**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.143/2007**

**<u>தேதி : 30.06.2026</u>**

**<u>(பி.வா.சா.1 ) – திரு .வேம்பு</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)</u>**

**1. என்னுடைய மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதைக் காட்டக்கூடிய மருத்துவ ஆவணங்கள் வீட்டில் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 8, 9 பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் ஒருவர் மட்டும் உறவினர், மற்றொருவர் உறவினர் கிடையாது. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் என் பெயருக்கு சொத்து ஆவணங்கள் எதுவும் இடம் பெறவில்லை. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட விபரம் எனக்கு தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் பற்றிய விபரம் எனக்கு தெரியும்.**

**2. வழக்கு சொத்தின் சர்வே எண்.451/2ஏ2ஏ ஆகும். சர்வே எண்.451/2ஏ2ஏ பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. என்னுடைய மனைவி கிரையம் செய்த சொத்திற்கும், மேற்படி சர்வே எண் சொத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. சர்வே எண்.451/2ஏ2ஏ சொத்து குறித்து எனக்கும், 8,9 பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் அதில் நான்குமால்களில்தான் பிரச்சனை. அவ்வாறு குழப்பம் ஏற்படுத்துவதற்காக எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> :– இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

RAJA B

Digitally signed by RAJA B
Date: 2026.06.30 16:19:57 +0530

Additional Sub Judge,
Palani.